| Name of the newspaper | Malai Tamizhagam |
|---|---|
| Date | September 9, 2015 |
| Event | World Duchenne Awareness Day 2015 |

# டுஸீன் விழிப்புணர்வு தினம் கோவையில் கொண்டாடப்பட்டது



கோவை, செப். 9-

கோவையில் ஆண் குழந்தைகளை அதிக அளவில் தாக்கும் தசை சிதைவு நோய் குறித்த விழிப்புணர்வு தினம் கொண்டாடப்பட்டது.

மாவிகுளர் டயக்னாஸ்டிக்ஸ், கேர் ரிசர்ச் சென்டர் டுஸீன் தசை சிதைவு மற்றும் தண்டுவட தசை சிதைவு நோய்களுக்கான சிறப்பு மையமாக திகழ்ந்து வருகிறது. இந்த மையம் சார்பில் டுசீன் விழிப்புணர்வு தினம் கொண்டாடப்பட்டது. கோவை ஜென்னி கிளப்பில் நடந்த இதற்கான நிகழ்ச்சியில் இந்த நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிகழ்வுகள் நடந்தன.

மேலும் நிகழ்ச்சியில் குழந்தைகளுக்கான சாக்கு சுறுக்குப் போட்டி, பலூன் விடும் போட்டி நடந்தன. இந்த நோய் தாக்கப்பட்ட குழந்தைகள் மற்ற குழந்தைகளைப் போல் ஓடி யாடி விளையாட முடியாது. அவர்களின் அந்த மனக் குறையை போக்கி அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. தேசிய ஊரக சுகாதார திட்டம் மூலம் நிறுவனம் நடத்திய நோயின் தாக்கம் உலக அளவில் 24 சதவிகிதம் உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை குறைத்து தடுக்கும் வகையில் நிறுவனம் பல்வேறு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

இதற்கான நிகழ்ச்சியில் டாக்டர். பி. ஆர். லஷ்மி தலைமை ஏற்க சுவர்ணலதா, டாக்டர். ஆர். கிருஷ்ண குமார், டாக்டர். ராமசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.